167

**சுருக்கம்**

கல்லூரிக் கல்வி - சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் - சென்னை மாவட்டம் - கொளத்தூர், நாமக்கல் மாவட்டம் - திருச்செங்கோடு, திண்டுக்கல் மாவட்டம்- தொப்பம்பட்டி மற்றும் தூத்துக்குடி மாவட்டம்- விளாத்திக்குளம் ஆகிய நான்கு இடங்களில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில் நிர்வாகத்தின் கீழ் சுயநிதி அடிப்படையில் தற்காலிகமாக புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்க அனுமதியளித்து - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**உயர்கல்வி (இ1) த் துறை**

அரசாணை (நிலை) எண். 188

நாள்: 06.10.2021
ஸ்ரீ பிலவ வருடம், புரட்டாசி- 20
திருவள்ளுவர் ஆண்டு, 2052
படிக்கப்பட்டவை:-

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 28810/ஆர்1/ 2021, நாள். 04.10.2021

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் 2021-22-ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது அத்துறையின் அமைச்சர் வெளியிட்டுள்ள அறிவிப்புகளுள், அறிவிப்பு எண். 5-ன்படி சென்னை உட்பட 10 இடங்களில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது எனவும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் கடிதத்தில், பின்வரும் நான்கு இடங்களில் கல்லூரி தொடங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, இந்த இடங்களில் அமையவுள்ள கல்லூரிகளில் BCA, B.Com, B.B.A மற்றும் B.Sc Computer Science ஆகிய நான்கு பாடப்பிரிவுகளுடன் கல்லூரி தொடங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1) கொளத்தூர், சென்னை மாவட்டம்
2) திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்
3) தொப்பம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்
4) விளாத்திக்குளம், தூத்துக்குடி மாவட்டம்

2. கல்லூரிக் கல்வி இயக்குநர் மேற்காண் கல்லூரிகள் அமைய உள்ள இடங்களை சார்ந்த சென்னை, தர்மபுரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல

Scanned with CamScanner

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களிடம் கல்லூரி அமைவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கையினை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது எனவும், அதனடிப்படையில் சென்னை, தருமபுரி, மதுரை, திருநெல்வேலி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களின் ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும். அவற்றின் முக்கிய அம்சங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

<u>சென்னை மண்டலம் - கொளத்தூர்:</u>

இங்கு அமையவுள்ள கல்லூரி ஸ்ரீ கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்ற பெயரில் சென்னை-99, கொளத்தூர் எஸ்.ஜே.அவென்யுவில் உள்ள எவர்வின் பள்ளிக் குழுமத்திற்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள எவர் எக்ஸல் பிளாக்கில் உள்ள பன்னிரெண்டு அறைகள் கொண்ட தரைத்தளம் மற்றும் முதல் தள தற்காலிக கட்டிடத்தில் புதிய கல்லூரி துவங்க அனுமதி வழங்குமாறு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கடிதம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தை 30.09.2021 அன்று ஆய்வு மேற்கொண்டதில் நடப்பாண்டில் கல்லூரியில் BCA, B.Com, BBA மற்றும் B.Sc Computer Science ஆகிய நான்கு பாடப்பிரிவுகள் துவங்கப்படவுள்ளதாகவும், அவற்றுக்கு முதலாமாண்டு வகுப்புகளுக்கு நான்கு அறைகளும், இரண்டு ஆய்வக அறைகளும், முதல்வர் மற்றும் ஆசிரியர்களுக்கு தனித் தனி அறைகள் உள்ளதாகவும் சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்கள் தெரிவித்து கல்லூரி துவங்க பரிந்துரைத்துள்ளார்.

<u>தருமபுரி மண்டலம் - நாமக்கல் மாவட்டம் - திருச்செங்கோடு:</u>

இங்கு அமையவுள்ள கல்லூரி நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சித்தளந்தூர் கிராமத்தில் திருச்செங்கோடு பரமத்தி வேலூர் நெடுஞ்சாலையினை ஒட்டி அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த அருள்மிகு அத்தனூர் அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 14 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் காலி நிலத்தில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவு மட்டும் தொடங்கப்படவுள்ள கல்லூரிக்காக பிரித்து கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும், இக்கல்லூரி தற்காலிகமாக நடைபெற அதே பகுதியில் பரமத்தி வேலூர் மாநில நெடுஞ்சாலையில் தற்போது செயல்படாமல் காலியாக இருக்கும் Alpha Institute of Management என்ற கல்வி நிறுவனத்தின் கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டதாகவும், அதனை ஆய்வு செய்ததில் குடிநீர் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் எட்டு வகுப்பறைகள், பெண்கள் கழிவறை மற்றும் ஆண்கள் கழிவறை தொகுப்பு ஒவ்வொன்றும் தனியே உள்ளதாகவும், ஆசிரியர் மற்றும் அலுவலக அறைகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் இருக்கை மற்றும் ஆய்வகத்திற்கு தேவையான கணினிகள் மட்டும் தேவைக்கேற்ப அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்லூரி அமையவிருக்கும் பகுதியில் அமைந்துள்ள பிற கல்லூரிகளின் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இணை இயக்குநரின் குறிப்புரையாக மாணாக்கர்களுக்கு கல்வி கட்டண சலுகை, தமிழ்வழி ஊக்கத் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் பெற்றுத் தர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

<u>மதுரை மண்டலம் - திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி:</u>

இக்கல்லூரி அமையவுள்ள இடத்தினை 01.10.2021 அன்று ஆய்வு செய்ததாகவும் ஒட்டன்சத்திரம் வட்டம், தொப்பம்பட்டியில் தொடங்க கருதப்பட்டுள்ள கல்லூரி தற்காலிகமாக ஒட்டன்சத்திரம் வட்டம், அம்பளிக்கை என்னுமிடத்தில் திரு. செ. ராமசாமி என்பாருக்கு சொந்தமான இடத்தில் சர்வே எண். 312/2C-ல் இரண்டு ஏக்கர் 78 செண்ட் பரப்பு புஞ்சை நிலமும், இதில் சுமார் 10,000 சதுர அடி பரப்பளவில் குடிநீர் வசதி மற்றும் மின் இணைப்புகளுடன், ஆர்சிசி கட்டிடம் மற்றும் ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரையுடன் கூடிய இடம் என்று மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்காண் இடத்தில் சுமார் எட்டு வகுப்பறைகள், ஒரு நூலகம், ஒரு கணினி ஆய்வகம் மற்றும் முதல்வர் அறை ஆகியவற்றுடன் குடிநீர் வசதிக்காக RO அமைப்பும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் கட்டிடங்களுடன் கூடிய மேற்காண் இடத்தை 18 மாதங்களுக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி கல்லூரிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என தனியர் ஒப்பந்த கடிதம் அளித்துள்ளதாக தெரிவித்து, அதன் நகலும் இணைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 2021-2022 ஆம் கல்வியாண்டில் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி மேற்காண் இடத்தில் தற்காலிகமாக செயல்பட அனுமதி அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>திருநெல்வேலி மண்டலம் - தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம்:</u>

இக்கல்லூரி அமையவுள்ள இடத்தினை 30.09.2021 அன்று நேரடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் கல்லூரி தற்காலிகமாக இயங்குவதற்கு என விளாத்திகுளத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான திருமண மண்டபம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக திருநெல்வேலி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் தெரிவித்துள்ளார். தற்காலிக கட்டிடத்தின் தரைத்தளத்தில் மூன்று சிறிய அறைகளும், கட்டிடத்தின் முதல் தளத்தில் இரண்டு அறைகள் உள்ளதாகவும், இக்கட்டிடத்தில் குடிநீர் வசதி, மாணவ மாணவியர்களுக்கென தனித் தனியே கழிப்பறை வசதிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு விளாத்திகுளத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் தூத்துக்குடி சாலையில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான 19 ஏக்கர் இடம் தெரிவு செய்யப்பட்டதாக அத்துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். மேற்காண் நான்கு மண்டல இணை இயக்குநர்களின் ஆய்வறிக்கையினை அதன் இணைப்புகளோடு அரசின் பரிசீலனைக்கென இணைத்தனுப்பியுள்ள கல்லூரிக் கல்வி இயக்குநர் இந்து சமய அறநிலையத்துறையால் மேற்குறித்த இடங்களில் தொடங்க கருதப்பட்டுள்ள நான்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக பின்வரும் குறிப்புகளையும் அரசுக்கு அளித்துள்ளார்:-

3. அரசுத் துறையான இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில் நிர்வாகத்தின் கீழ் இக்கல்லூரிகள் தொடங்க கருதப்பட்டுள்ள நிலையில் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கும் போது கல்வி முகமைகளால் செலுத்தப்பட வேண்டிய ரூ.20 இலட்சம் கூட்டு நிலை வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்தும், அறநிலையத்துறையின்

Scanned with CamScanner

சொந்த நிலத்திலேயே நிலையான கட்டிடங்கள் கட்ட தீர்மானிக்கப்படுகின்ற நிலையில் மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வுக்கு விலக்களித்தும், ரூ.50 இலட்சம் நிதி ஆதாரம் கோருதல் மற்றும் பிற அரசு துறைகளின் தடையின்மை சான்று பெறுவதிலிருந்தும் விலக்களிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

4. மேற்காண் சூழ்நிலையில், சென்னை மாவட்டம் - கொளத்தூர், நாமக்கல் மாவட்டம் - திருச்செங்கோடு, திண்டுக்கல் மாவட்டம் - தொப்பம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் - விளாத்திகுளம் ஆகிய நான்கு இடங்களில் இந்து சமய அறநிலையத்துறையால் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி அளித்து உரிய அரசாணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் மேற்காண் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கும் போது கல்வி முகமைகளால் செலுத்தப்பட வேண்டிய ரூ.20 இலட்சம் கூட்டு நிலை வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்தும், அறநிலையத்துறையின் சொந்த நிலத்திலேயே நிலையான கட்டிடங்கள் கட்ட தீர்மானிக்கப்படுகின்ற நிலையில் மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வுக்கு விலக்களித்தும், ரூ.50 இலட்சம் நிதி ஆதாரம் கோருதல் மற்றும் பிற அரசு துறைகளின் தடையின்மை சான்று பெறுவதிலிருந்தும் விலக்களித்து, பின்வரும் இடங்களில் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில் நிர்வாகத்தின் கீழ் தற்காலிகமாக சுயநிதி அடிப்படையில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை BCA, B.Com, B.B.A மற்றும் B.Sc Computer Science ஆகிய நான்கு பாடப்பிரிவுகளுடன் 2021-22-ஆம் கல்வியாண்டில் தொடங்க அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ. எண். | தொடங்க உத்தேசித்துள்ள கல்லூரியின் பெயர் | கல்லூரி தற்காலிகமாக அமையவுள்ள இடம் | கோயில் நிர்வாகத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொளத்தூர், சென்னை | எஸ்.ஜே.அவென்யுவில் உள்ள எவர்வின் பள்ளிக் குழுமத்திற்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள எவர் எக்ஸல் பிளாக், கொளத்தூர், சென்னை.99. | சென்னை, அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் |
| 2. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் | நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் பரமத்தி வேலூர் மாநில நெடுஞ்சாலையில் தற்போது செயல்படாமல் காலியாக இருக்கும் Alpha Institute of Management வளாகம் | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு வட்டம் |

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 3. | அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், அம்பளிக்கை என்னுமிடத்தில் தனியாருக்கு சொந்தமான இடம் | பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் |
| 4. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம் | விளாத்திகுளம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமான இடம் | திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் |

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள், சென்னை, தர்மபுரி, மதுரை மற்றும் திருநெல்வேலி.
சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்,
பதிவாளர், சம்மந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள்.
சம்மந்தப்பட்ட நான்கு கல்லூரிகள்.
நகல்:
மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், உயர் கல்வித்துறை, சென்னை -9.
இ.கோ/உ.திரி.

/ஆணைப்படி /அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner

## Abstract

Collegiate Education - Self-financing Arts and Science Colleges - Approvals granted for starting temporary Arts and Science Colleges on self-finance basis to temple administration under Hindu Religious and Charitable Endowments Department in Kolathur, Chennai District, Tiruchengode, Namakkal District, Thoppampatti, Dindigul District, Vilathikulam, Toothukudi District - Orders issued.


Higher Education (E1) Department

G.O. (Ms.) No. 188

Dt. 06.10.2021

Sri Plava Year, Purattasi- 20

Thiruvalluvar Year 2052

*Read:*

Director of Collegiate Education Letter R.C. No.28810/R1/2021, dated 4.10.2021

Order:

In the letter read first given above, the Director of Collegiate Education has informed that among the announcements made during the Hindu Religious and Charitable and Endowments 2021-22 year demand note budget session, announcement No.5 made by the Minister for the said department it was announced that Science and Arts Colleges will be started in ten places in Tamil

Nadu including Chennai and that in the letter written by the Commissioner, Hindu Religious and Charitable and Endowments Department, it is stated that it has been decided to start colleges in the following four places with four courses of BCA, B.Com, B.B.A. and B.Sc. Computer Science.

1. Kolathur, Chennai District
2. Thiruchengodu, Namakkal District
3. Thoppampatti, Dindigul District
4. Vilathikulam, Toothukudi District

2. The Director of Collegiate Education has informed that the Regional Joint Directors of Collegiate Education of Chennai, Dharmapuri, Madurai and Tirunelveli, where the above mentioned colleges are to be started were asked to undertake survey of the infra structure facilities and other facilities for establishing the colleges and submit the survey reports and based on this, the reports of the Regional Joint Directors of Collegiate Education of Chennai, Dharmapuri, Madurai and Tirunelveli have been submitted and their salient features are provided as follows.

Chennai Region - Kolathur:

It is informed that a letter has been issued on behalf of the Hindu Religious and Charitable and Endowments Department, seeking permission to start a college in the name of Sri Kapaliswarar Arts and Science College, in the temporary building of ground and first floors with twelve rooms in the Ever Excel block situated in the place belonging to Everwin Group of Schools in SJ Avenue, Kolathur, Chennai-99. After Inspecting this place on 30.9.2021, the Joint Director, Collegiate Education, Chennai Region has informed that it has been proposed to start four courses such as BCA, B.Com, BBA and B.Sc. Computer Science in the current academic year and for them there are four rooms for the first year classes, two rooms for laboratories, one separate room each for the Principal and the lecturers for the said courses and has recommended the starting of the college.

temporarily during the academic year 2021-2022, in the above-mentioned place.

Tirunelveli Region - Toothukudi District, Vilathikulam:

The Joint Director of Tirunelveli Regional Collegiate Education has informed that the place proposed for the college was surveyed directly on 30.9.2021 and to facilitate temporary functioning of the college, a marriage hall in Vilathikulam belonging to the Hindu Religious and Charitable and Endowments Department has been selected. In the temporary building, it has been informed that three small rooms are there on the ground floor, two rooms on the first floor, drinking water and toilet facilities separately for boys and girls are available. Further, he has also mentioned that to construct a permanent structure for this college, 19 acres of land belonging to the Hindu Religious and Charitable Endowments Department has been located at three kilometers from Vilathikulam on Toothukudi Road has been selected as has been informed by said Department. The Director of Collegiate Education who has furnished to the Government the survey reports of the four regional joint directors along with the enclosures for the consideration of the Government, has also furnished the following notes regarding sanction for the four Arts and Science colleges in the above-mentioned places to be started by the Hindu Religious and Charitable and Endowments Department.

3. He has informed that, on consideration of the status that these colleges, which are proposed to be started under the temple administration that are under the control of the Hindu Religious and Charitable and Endowments Department, a Government Department, the Rs 20 lakhs Joint Deposit, required to be remitted by educational agencies while starting self-financing colleges may be waived off and in view of the decision to construct permanent structures on the land belonging to the Hindu Religious and Charitable and Endowments Department, the survey to be conducted by the District Revenue officer may be waived off and the seeking of proof of financial solvency of Rs 50 lakhs requirement as well as requirement of obtaining No Objection Certificates from other government departments may be waived off;

4. Under the above circumstances, the Director of Collegiate Education has requested the Government to permit starting of colleges in the four places, viz. Kolathur - Chennai District, Tiruchengode - Namakkal District,

Dharmapuri Region- Namakkal District-Tiruchengode:

He has informed that for the college proposed to be started here, it has been informed that 5 acres will be set apart and given out of the 14 acre expanse of vacant drylands located adjacent to the Tirunchengodu - Paramathi Velur Highway in Chithalanthur village, Tiruchengodu Taluk, Namakkal District belonging to Sri Athanur Amman Temple which is dependent on the Hindu Religious and Charitable and Endowments Department. Further, It has been informed that for the college to function temporarily, the infra structure facilities of Alpha Institute of Management, an educational Institution presently non-functional and vacant situated in the same area on the Paramathi Velur state Highway may be used and on its inspection, it was found to have eight class rooms with drinking water and basic infrastructure amenities, toilet complex each for girls and boys separately and rooms for lecturers and office; only chairs for students and computers for laboratory have to be arranged according to the requirement. Further, information about other colleges established in the region where this college is going to be started has been provided. It has been mentioned as a note by the Joint Director that all benefits such as concession in educational fees for students, incentive for pursuing Tamil medium and educational scholarship and other such assistances may be obtained and provided to the students.

Madurai Region - Dindigul District - Thoppampatti:

It is mentioned that the Joint Director of Collegiate Education, Madurai Region has informed that the area where this college will be established was surveyed on 1.10.2021 and the college proposed to be established in Thoppampatti is temporarily to start in 2 acres 78 cent drylands bearing survey No. 312/2c in place known as Ambalikkai, Oddanchathiram Taluk and belonging to Sri S. Ramasami and about 10000 sq ft of RCC building and asbestos roofed portions with drinking water and electricity connection, is in this. It is stated that in the above-mentioned place, apart from approximately eight classrooms, a library, a computer lab and Principal's room and RO facility for drinking water have been provided. Further, the private party has given contract letter to use the above-mentioned place with building for college for 18 months without any conditions, copy of which was enclosed. Based on this, it is stated that Sri Pazhani Andavar Women's Arts College could be permitted to function

Thoppampatti - Dindigul District and Vilathikulam- Toothukudi District by the Hindu Religious and Charitable and Endowments Department and issue appropriate Government Order for the same.

5. Government, after a careful consideration of the above opinion of the Director of Collegiate Education, has decided to exempt from payment of Rs. 20 lakhs Joint Deposit required to be remitted by educational institutions while commencing self-financing colleges, waive the survey procedure of the District Revenue Officer in view of the decision to construct permanent structures on the lands belonging to the Hindu Religious and Charitable and Endowments Department, waive proof of financial solvency of Rs 50 lakhs requirement as well as requirement of obtaining No Objection Certificates from other government departments, and has decided to permit starting of new self financing colleges temporarily for the academic year 2021-22 for four courses of BCA, B.Com, B.B.A. and B.Sc. Computer Science under the temple administration that are under the control of the Hindu Religious and Charitable and Endowments Department, in the following places under the names given against them, and orders accordingly.

| Sl. No. | Name of the proposed college | Place where the college will be temporarily established | Name of temple Administration |
|---|---|---|---|
| 1. | Sri Kapaliswarar Arts & Science College, Kolathur, Chennai | Ever Excel Block in SJ Avenue at Kolathur, Chennai 99 owned by Everwin group of Schools. | Sri Kapaliswarar Temple, Chennai |
| 2. | Sri Arthanareeswarar Arts & Science College,Thiruchengodu Taluk, Namakkal District. | Alpha Institute of Management Complex on the Paramathi Vellore State Highway, Tiruchengode Taluk, Namakkal District, that is presently non-functional and vacant | Sri Arthanareeswarar Temple, Tiruchengode Taluk. |
| 3. | Sri Pazhani Andavar Women's Arts College, Ottanchathiram, Dindigul District | Place owned by a private person in Ambalikkai, Ottanchathiram Taluk, Dindigul District | Pazhani Sri Dhandayuthapani Swamy Temple |

177

| | | | |
|---|---|---|---|
| 4. | Sri Subramanya Swami Arts & Science College, Vilathikulam, Toothukudi- District | Place belonging to Sri Meenakshi SundareswararTemple, Vilathikulam | Tiruchendur Sri Subramanya Swamy Temple |

(By order of the Governor)

T. Karthikeyan

Government Principal Secretary

To:
The Director of Collegiate Education, Chennai 6
The Commissioner, Hindu Religious and Charitable and Endowments Department, Chennai
Joint Directors of Regional Collegiate Education, Chennai, Dharmapuri, Madurai and Tirunelveli
Concerned District Revenue Officer
The Registrar, Concerned Universities,
Concerned four colleges

Copy:
Special Personal Assistant to Hon'ble Minister for Higher Education, Chennai - 9
Personal Assistant to the Principal Secretary of Government, Department of Higher Education, Chennai - 9.
Current File /Spare

/Sent by order/

sd/
Section Officer